Tamil

# உங்கள் கோவிட்-19 பரிசோதனையின் முடிவுகளை எப்படிப் பெறுவது

உங்கள் கோவிட்-19 சோதனை முடிவை நீங்கள் பெறுவதற்கு மூன்று வழிகள் உள்ளன:

1. தனிப்பட்ட ஒரு க்யூ.ஆர். குறியீடு (QR code) வழியாக
2. முடிவுகள் வலைவாசல் (Results Portal) வழியாக
3. உங்கள் கைப்பேசிக்கு அனுப்பப்படும் ஒரு குறுந்தகவல் செய்தி (SMS message) வழியாக

**உங்கள் பரிசோதனைக்குப் பிறகு, உங்கள் முடிவுகளைப் பெறும் வரை, நீங்கள் சுய தனிமைப்படுத்தலில் (self-isolate) இருக்க வேண்டும்.**

- நியூ சவுத் வேல்ஸ் சுகாதாரத்துறையினால் (NSW Health) வேறுவிதமாக அறிவுறுத்தப்படாத பட்சத்தில், நேராக வீட்டிற்குச் சென்று சுயமாகத் தனிமைப்படுத்திக் கொள்ளவும்.
- நீங்கள் உடல்நலத்தோடு இருப்பதாக உணர்ந்தாலும், உங்கள் முடிவைப் பெறும் வரை வீட்டிலேயே இருக்கவும்.
- பெரும்பாலானவர்கள் தங்கள் முடிவுகளை 24 மணி நேரத்திற்குள் பெறுவார்கள்.

### தெரிவு 1: தனிப்பட்ட க்யூ.ஆர். குறியீடு (QR code)

உங்களுக்குப் பரிசோதனை செய்யப்பட்டபோது, தனிப்பட்ட க்யூ.ஆர். குறியீட்டைக் (QR code) (உங்கள் பெயர் மற்றும் அதன் கீழ் பிறந்த தேதியுடன்) கொண்டுள்ள துண்டுப் பிரசுரம் (flyer) ஒன்று உங்களுக்கு வழங்கப்பட்டிருந்தால், தயவுசெய்து அந்த க்யூ.ஆர். குறியீட்டை உங்கள் கைப்பேசியின் புகைப்படக் கருவி மூலம் அலகீடு (scan) செய்து, 'அனுப்பு' (send) என்பதை அழுத்தவும்.

இந்த க்யூ.ஆர். குறியீட்டில் உங்கள் தனிப்பட்ட விவரங்கள் உள்ளன. அதை வேறு யாரும் பயன்படுத்த முடியாது.

### தெரிவு 2: இணைய முடிவுகள் வலைவாசல் (Online Results Portal)

- https://my.pathology.health.nsw.gov.au என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்.
- உங்கள் கைப்பேசி எண்ணை உள்ளீடு செய்யும்படி கேட்கப்படுவீர்கள், பின்னர் நீல நிறப் பொத்தானை அழுத்தவும். நாட்டின் குறியீடு (country code) +61 என்று கூறுவது ஆஸ்திரேலியாவுக்கானது என்பதை குறித்துக் கொள்ளவும். நீங்கள் ஒரு சர்வதேசக் கைப்பேசியைப் பயன்படுத்துகிறீர்கள் என்றால், நாட்டின் குறியீட்டை +61 -ல் இருந்து, உங்கள் கைப்பேசி பயன்படுத்தும் நாட்டின் குறியீட்டுக்கு மாற்ற வேண்டும்.

- உங்கள் கைப்பேசிக்கு ஒரு குறியீடு அனுப்பப்படும். இந்த குறியீட்டை இணையதளத்தில் 'கடவுக் குறியீடு' (‘passcode’) என்று கேட்கும் இடத்தில் உள்ளீடு செய்யவும், பின்னர் நீல நிறப் பொத்தானைக் அழுத்தவும்.

**குறிப்பு:** இணைய முடிவுகள் வலைவாசலுக்கு (online Results Portal) நீங்கள் வருவது முதன்முறையாக இருந்தால், நீங்கள் சில கூடுதல் தகவல்களை உள்ளீடு செய்ய வேண்டும்.

- முடிவுகளைக் காண்க’ (‘View Results’)என்பதை அழுத்தி, நீங்கள் பின்வரும் விவரங்களை உள்ளீடு செய்ய வேண்டும்:
  - உங்கள் முதல் பெயர்
  - உங்கள் கடைசிப் பெயர்
  - உங்கள் பிறந்த தேதி
  - உங்கள் வீட்டின் அஞ்சல் குறியீடு
  - உங்கள் பாலினம் – எடுத்துக்காட்டாக, ஆண் அல்லது பெண் அல்லது மற்றவர்
  - சேகரிக்கப்பட்ட தேதி - இது உங்களுக்குப் பரிசோதனை செய்யப்பட்ட தேதி
  - உங்களிடம் இருந்தால், மருத்துவ காப்பீட்டு எண் (Medicare number). உங்களிடம் இல்லையென்றால், இதை அப்படியே காலியாக விட்டு விடவும்.

- ‘சேகரிப்பு மையத்தைத் தேர்ந்தெடு’ (‘Select collection centre’) என்று எழுதப்பட்டிருக்கும், மேலே அமைந்துள்ள நீல நிறப் பொத்தானை அழுத்தி, நீங்கள் கோவிட்-19 பரிசோதனை செய்த இடத்தைத் தேடவும். நியூ சவுத் வேல்ஸ் சுகாதாரத்துறை (NSW Health) நடத்தும் மையங்களைப் போலவே, தனிப்பட்ட முறையில் இயங்கும் மையங்களும் உள்ளன. நியூ சவுத் வேல்ஸ் சுகாதாரத்துறை - நோயியல் பிரிவால் (NSW Health Pathology) நடத்தப்படாத ஓர் இடத்தை நீங்கள் தேர்வுசெய்தால், உங்கள் முடிவுக்காக மருத்துவ நிலையத்தை எவ்வாறு தொடர்புகொள்வது என்பது குறித்த தகவலை, இந்த இணையதளம் உங்களுக்கு வழங்கும்.
- உங்களுக்கான முடிவைப் பார்க்க, ‘முடிவுகளைக் காண்க’ (‘View Results’) என்பதை அழுத்தவும்.
- உங்கள் முதல் பெயர் மற்றும் பிறந்த தேதியை ‘தேதேமாமாஆஆ’ (DDMMYYYY) என்ற வடிவில் தட்டச்சு செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுவீர்கள், எடுத்துக்காட்டாக, 01051971.
- உங்கள் கோவிட் பரிசோதனை முடிவின் நகல் ஒன்றை அணுகவும், பதிவிறக்கம் செய்யவும் உங்களால் முடியும்.

**தெரிவு 3: குறுந்தகவல் (SMS) ஒன்றைப் பெறுதல்**

இணைய முடிவுகள் வலைவாசலை (online Results Portal) உங்களால் அணுக முடியாவிட்டால், உங்கள் கைப்பேசியில் குறுந்தகவல் (SMS) வழியாக உங்கள் முடிவைப் பெறலாம்.

- ‘எனக்கான முடிவு’ (‘my result’) என்ற வார்த்தைகளை 0480 050 030 என்ற எண்ணுக்கு அனுப்பவும்
- கேட்கப்படும் போது, பின்வரும் தகவல்களைக் குறுந்தகவலில் (SMS) அனுப்பவும்:
    - உங்கள் கடைசிப் பெயர்.
    - எண்களை மட்டும் பயன்படுத்தி உங்கள் பிறந்த தேதி - ‘தேதேமாமாஆஆ’ (DDMMYYYY). எடுத்துக்காட்டாக, 01012000
    - நீங்கள் ஒரு குழந்தைக்காகப் பதிவு செய்கிறீர்கள் என்றால், நீங்கள் பெற்றோர் அல்லது பாதுகாவலர் என்பதையும், அத்துடன் குழந்தைக்காகச் சுகாதாரப் பாதுகாப்பு முடிவுகளை எடுக்க முடியும் என்பதையும் உறுதிப்படுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுவீர்கள். உறுதிப்படுத்த, ஆம் (Yes) என்று எழுதி அனுப்பவும்.
    - உங்கள் பாலினம் ஆணுக்கு ‘M’, பெண்ணுக்கு ‘F’ அல்லது மற்றவருக்கு ‘O’.
    - உங்கள் அஞ்சல் குறியீடு, (எடுத்துக்காட்டாக 2114)
    - உங்கள் கோவிட்-19 பரிசோதனை செய்யப்பட்ட தேதி ‘தேதேமாமாஆஆ’ (DDMMYYYY) என்ற வடிவில், எடுத்துக்காட்டாக, 01052021
- உங்கள் விவரங்களைச் சரிபார்த்து, அவை சரியாக இருந்தால் ஆம் (Yes) என்று தட்டச்சு செய்யவும். நீங்கள் தவறு செய்திருந்தால், மீண்டும் தொடங்குவதற்கு, இல்லை (No) என்று தட்டச்சு செய்யவும்.
- நீங்கள் அனைத்தையும் முடித்ததும், ***'உங்கள் பதிவு பெறப்பட்டது' (‘Your registration has been received’)*** என்ற ஒரு செய்தியைப் பெறுவீர்கள்.
- உங்கள் முடிவைப் பெற, நீங்கள் தட்டச்சு செய்ய வேண்டிய கடவுக் குறியீடு (passcode) ஒன்றையும் நீங்கள் பெறுவீர்கள்.
- உங்கள் முடிவு தயாரானதும், உங்களுக்கு ஒரு குறுந்தகவல் செய்தி (SMS message) வரும், அது ‘தயார்’ (‘Ready’) என்ற வார்த்தையையும், உங்கள் கடவுக் குறியீட்டையும் (passcode) தட்டச்சு செய்யும்படி கேட்கும்.
- அதன்பின், முடிவு உங்கள் கைப்பேசிக்கு வரும்

**உங்களுக்கு ஏதாவது உதவி தேவையா?**

உங்கள் முடிவைப் பெறுவதில் உங்களுக்குச் சிக்கல்கள் இருந்தால், அது 48 மணிநேரத்திற்கு மேல் ஆகிவிட்டது என்றால், https://www.pathology.health.nsw.gov.au/covid-19-info/covid-19-results-direct என்ற எங்கள் வலைத்தளம் மூலம் நீங்கள் பின்தொடர் நடவடிக்கை (follow up) எடுக்கலாம்.

**எனது பரிசோதனை முடிவு எனக்கு கோவிட்-19 நோய்த்தொற்று இருப்பதாகக் காட்டினால் என்ன நடக்கும்?**

உங்கள் பரிசோதனையில் உங்களுக்கு கோவிட்-19 நோய்த்தொற்று இருப்பதாகக் காட்டினால், இந்த தெரிவுகளில் ஒன்றின் வழியாக உங்கள் முடிவைப் பெற நீங்கள் பதிவுசெய்திருந்தால், சுய-தனிமைப்படுத்துதல் (self-isolating) பற்றிய கூடுதல் தகவலுடன், முடிவுகள் வலைவாசல் (Results Portal) வழியாக உங்களுக்கான முடிவு கிடைக்கும், என்ற குறுந்தகவல் (SMS) ஒன்றை நீங்கள் பெறுவீர்கள்.

உங்கள் உள்ளூர் பொது சுகாதாரக் குழுவின் (Public Health team) ஊழியர்களாலும், நீங்கள் தொடர்புகொள்ளப்படுவீர்கள்.

**தனியுரிமை சேகரிப்பு அறிவிப்பு:** நியூ சவுத் வேல்ஸ் சுகாதாரத்துறை - நோயியல், நோயாளிகளின் கோவிட்-19 பரிசோதனை முடிவுகளை அவர்களுக்கு அறிவிக்கும் நோக்கங்களுக்காகத் தகவல்களைச் சேகரிக்கிறது. இந்தத் தகவல், பொதுவாக நியூ சவுத் வேல்ஸ் சுகாதாரத்துறைக்குள் பயன்படுத்தப்படும், இருப்பினும், நோயாளியின் முடிவுகளை அவர்களுக்கு அறிவிக்கும் நோக்கங்களுக்காக 'சேவை நியூ சவுத் வேல்சுக்கும்' (ServiceNSW) இது வெளியிடப்படலாம். தனிநபர்கள் தங்களைப் பற்றி அரசாங்க நிறுவனம் வைத்திருக்கும் தகவல்களை அணுகுவதற்கான சட்டப்பூர்வ உரிமை உள்ளது. மேலும் தகவலுக்கு, www.pathology.health.nsw.gov.au/about-us/privacy என்ற இணையதளத்துக்குச் செல்லவும். தனிநபர்களால் கோரப்படும் தகவல்களின் முழுமையான அல்லது பகுதியை வழங்காததன் சாத்தியமான விளைவுகளால், NSWHP நோயாளிகளுக்குப் பரிசோதனை முடிவுகளை வழங்க முடியாமல் போகலாம்.